PUTHIYA THALAIMURAI FOUNDATION

A People-based NGO Working for Youth Development and Rural Education

ISRB EXPO™

Indian Small & Rural Business Exposition

(A Unit of Puthiya Thalaimurai Foundation)

(A National Initiative to Promote Small & Rural Businesses)

# கொரோனா நோய் தொற்று மற்றும் அதைத் தொடர்ந்து நடைமுறைபடுத்தப்பட்ட ஊரடங்கால் சிறு மற்றும் கிராமப்புற தொழில்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து மீண்டு வர சில ஆலோசனைகள்...

மே 21, 2020

தமிழகம் முழுவதும் 300க்கும் மேற்பட்ட சிறு மற்றும் கிராமப்புற தொழில் முனைவோர்கள் மற்றும் பல்வேறு துறை வல்லுநர்கள் ஆகியோர்களிடம் ஐ.எஸ்.ஆர்.பி எக்ஸ்போ மூலம் ஏப்ரல் மே மாதத்தில் எடுக்கப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட தகவல்களை உங்கள் பார்வைக்கு வழங்குகிறோம்.

## ஐ.எஸ்.ஆர்.பி எக்ஸ்போ (ISRB Expo) - ஓர் அறிமுகம்

| | |
|---|---|
| ஏழு ஆண்டு கால பயணம் | 90 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் / கருத்தரங்கம் / கூட்டங்கள் |
| 5000க்கும் அதிகமான ஐ.எஸ்.ஆர்.பி எக்ஸ்போ உறுப்பினர்கள் | 600க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்கள் |

ஐ.எஸ்.ஆர்.பி எக்ஸ்போ என்பது சிறு மற்றும் கிராமப்புற தொழில் வணிகங்களுக்கான ஒரு தளமாகும், தொழில்முனைவோர்களின் திறன்கள், தயாரிப்புகள், சேவை வழங்கல்கள் ஆகியவற்றைக் காட்சிபடுத்தி அதன் மூலம் அவர்களின் வணிகத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்தச் செல்ல ஒரு சிறந்த வழியாகும். சிறு வணிகம் மற்றும் கிராமப்புற தொழில்கள் தான் நமது இந்திய பொருளாதாரத்தின் அடிப்படை.

இந்திய சிறு மற்றும் கிராமிய தொழில் வர்த்தக கண்காட்சி [ஐ.எஸ்.ஆர்.பி எக்ஸ்போ] என்பது புதிய தலைமுறை அறக்கட்டளை செயல்படுத்தும் ஒரு திட்டமாகும். புதிய தலைமுறை அறக்கட்டளை 2010 இல் புதிய தலைமுறை குழுமத்தின் நிறுவனர் மற்றும் அறங்காவலர் டாக்டர் பி.சத்யநாராயணன் அவர்களால் நிறுவப்பட்டது. கிராமப்புற கல்வி மற்றும் இளைஞர் மேம்பாடு ஆகிய இரண்டு கோட்பாட்டில் செயல்பட்டு வருகிறது. 2010 முதல், அறக்கட்டளை 7 வணிக கண்காட்சிகள், 50க்கும் மேற்பட்ட பயிற்சி முகாம்கள், விழிப்புணர்வு கூட்டங்களை நடத்தியுள்ளது. இந்த வெளிப்பாடு, தொழில்முனைவோருக்கு தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்துவதில் மட்டுமல்லாமல் சந்தைப்படுத்துதல் மற்றும் மதிப்பு சேர்க்கும் திட்டங்கள் மூலம் நிதி உதவி பெறுவதற்கும் வழிகாட்டுகிறது.

ISRB EXPO™
Indian Small & Rural Business Exposition
(A Unit of Puthiya Thalaimurai Foundation)
(A National Initiative to Promote Small & Rural Businesses)

## ஐ.எஸ்.ஆர்.பி எக்ஸ்போ - சில புகைப்படங்கள் உங்கள் பார்வைக்கு....



இந்திய சிறுதொழில் கண்காட்சி -2013, சென்னை



பாக்குமட்டை தட்டு பயிற்சி முகாம் - 2016, சேலம்



ஏற்றுமதி & இறக்குமதி தொழில் வாய்ப்புகள்
கருத்தரங்கம்- 2017, கொடைக்கானல்



ஐ.எஸ்.ஆர்.பி எக்ஸ்போ - 2020, கோயம்புத்தூர்

## பல்வேறு சிறு தொழில் வாய்ப்புகள்

| | | |
|---|---|---|
| 1. பாக்குமட்டை தட்டு தயாரிப்பு | 6. கைவினைப்பொருட்கள் | 11. தேங்காய் நார் தொழில் |
| 2. சுருள்பாசி வளர்ப்பு | 7. காளான் வளர்ப்பு | 12. அழகு நிலையம் |
| 3. மூலிகைப்பண்ணை | 8. கணிப்பொறி பழுது பார்த்தல் | 13. இருசக்கர வாகனம் பழுது பார்த்தல் |
| 4. சணல்பை தயாரிப்பு | 9. ஏற்றுமதி தொழில் | 14. மண்புழு உரம் தயாரித்தல் |
| 5. சூரிய சக்தி மின்சாரம் | 10. அலைப்பேசி பழுது பார்த்தல் | 15. உணவு பதப்படுத்துதல் |

## சிறு மற்றும் கிராமப்புற தொழில் முனைவோர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகள்

1. இந்த ஊரடங்கு அமலில் உள்ள காலகட்டத்தில் தொழில் தொடர்பாக தாங்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் இடர்பாடுகள் என்ன?

2. மேலும் ஊரடங்கு முடிந்தவுடன் உங்கள் தொழிலை அடுத்த கட்டத்திற்கு செல்வதற்கு தொழில் வல்லுநர்களின் தொடர்புகள் / அரசாங்க உதவி, என்ன விதமான உதவிகள் தேவை.

3. உங்கள் வணிகத்தை அதிகம் பாதிக்காத இந்த ஊரடங்கு சூழ்நிலையை எவ்வாறு கையாள்வது ? வரும் காலத்தில் இது போன்று மீண்டும் ஊரடங்கு ஏற்பட்டால் அதற்கு நீங்கள் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன?

4. மேலும் ஊரடங்கு முடிந்தவுடன் தங்கள் தொழிலை மீண்டும் நல்ல நிலைமைக்கு கொண்டு செல்ல என்ன விதமான திட்டங்களை வைத்துள்ளீர்கள்?

5. ஊரடங்கு காலத்தில் தங்கள் தொழில் சார்ந்த வாடிக்கையாளர்களுடன் தொடர்பு உள்ளதா? ஊரடங்கு முடிந்தவுடன் அவர்களை தொடர்ந்து தக்க வைக்க என்ன விதமான நடவடிக்கைகளை எடுக்க போகிறீர்கள்?

6.கொரோனா நோய் தொற்று பரவாமல் தடுக்க நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

7. கொரோனா நோய் பேரிடரால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ உங்களுக்கு வாய்ப்பு கிடைத்ததா? அவர்களுக்கு நீங்கள் உதவத் தயாரா?அப்படி கிடைத்தால் நீங்கள் என்ன விதமான உதவிகளை செய்வீர்கள்?

## ISRB Expo மூலம் சிறு மற்றும் கிராமப்புற தொழில் முனைவோர்களிடம் சமீபத்தில் எடுத்த ஆய்வு அறிக்கையின் ஒரு தொகுப்பு.

# (SUMMARY)

- இன்றைய நவீன யுகத்தில் ஆரோக்கியமான நல்ல உணவுப் பழக்க வழக்கங்கள், அன்றாடம் சிறுது நேரம் உடற்பயிற்சி, குடும்ப உறுப்பினர்களுக்கு நேரம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இந்த ஊரடங்கு நமக்கு உணர்த்தியுள்ளது . எதிர்காலத்தில் மீண்டும் ஒரு ஊரடங்கு ஏற்பட்டால் இந்த அனுபவம் நமக்கு கைகொடுக்கும்.

- இன்றைய காலகட்டத்தில் நமது அனைத்து பணிகளுமே ஆன்லைன் மூலம் நாம் செய்து கொள்ள முடிகிறது. உதாரணமாக பஸ்/ரெயில் டிக்கெட், மின்சார கட்டணம், சொத்து வரி, குடிநீர் வரி போன்ற பலவற்றை நாம் ஆன்லைன் மூலம் இருந்த இடத்தில் இருந்தே செய்து கொள்ள முடிகிறது. ஆகையால் நாமும் ஆன்லைனிற்கு நமது தொழிலை மாற்றிக் கொண்டு ஆன்லைன் மூலம் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதற்கு ஏற்றார் போல் நம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

- இந்த ஊரடங்கினால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களால் பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்ல முடியவில்லை. லாபமும் இல்லை, முதலும் போய் விட்டது. ஆகையால் ஆன்லைனில் பொருட்களை நேரடியாக விற்பனை செய்யும் முறைகளுக்கு விவசாயிகள் மாற வேண்டும். ஒரு கிராமத்தில் உள்ள விவசாயிகள் அவர்கள் விளைவித்த பொருட்களை -E- Marketing முறையில், இடைத்தரகர்கள் இல்லாமல் விவசாயிகள் சங்கத்தின் மூலம் முறையில் விற்பனை செய்ய வேண்டும். இந்த முறையில் இடைத்தரகர்கள் இல்லாமல் லாபம் நேரடியாக விவசாயிகளுக்கு சென்று சேரும்.

- அரசின் கடன் திட்டங்கள் மற்றும் கடன் உதவி பற்றி தொழில் முனைவோர்களுக்கு உதவும் விதத்தில் ஒவ்வொரு வங்கியிலும் கட்டாயம் ஒரு சிறப்பு அலுவலரை (Special Officer) நியமனம் செய்ய வேண்டும். இதன் மூலம் சிறுதொழில் முனைவோர்களுக்கு கடன் வழங்கிட துரிதமான முயற்சி எடுக்க வேண்டும்.

- வெளிமாநிலங்களில் இருந்து புலம் பெயர் தொழிலாளர்களின் எண்னிக்கையும், அவர்களைப் பற்றிய முழுமையான தகவல்களும் ஒவ்வொரு மாவட்ட / தாலுகா அலுவலங்களிலும் இருக்க வேண்டும். குறிப்பாக கட்டட தொழிலாளர்கள், ஓட்டல் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், தையல் தொழிலாளர்கள் போன்றவர்களின் தகவல்கள் கண்டிப்பாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் இது போன்ற நெருக்கடியான காலகட்டத்தில் அவர்களுக்கு சரியான முறையில் உதவ முடியும்.

புதிய தலைமுறை அறக்கட்டளை - ஐ.எஸ்.ஆர்.பி.எக்ஸ்போ குழு

## தொழில் முனைவோர்களிடம் இருந்து இது வரை பெறப்பட்ட கருத்துகளில் சில உங்கள் பார்வைக்கு....

**1**

**நிறுவனம்: ஜூலா ஹெர்பல் சானிடரி நாப்கின்**

**உரிமையாளர்: திருமதி. ஜூலா**

**தொழில்: சானிடரி நாப்கின் உற்பத்தி**

**இடம்: கோயம்புத்தூர்**

- உத்யோக் ஆதார் (UDYOG AADHAR) என்பது இந்திய அரசினால் வழங்கப்பட்ட 12 இலக்கங்கள் கொண்ட தனித்துவ அடையாள எண் ஆகும். இதனை இந்திய அரசின் சிறு, குறு மற்றும் நடுத்தர முனைவக அமைச்சகமானது இந்தியாவில் உள்ள சிறு மற்றும் நடுத்தர முனைவகத்திற்காக வழங்கியுள்ளது. மேலும் இது வணிகத்திற்கான ஆதார் எனவும் அழைக்கப்படுகிறது. உத்யோக் ஆதார் உள்ளவர்களுக்கு அரசாங்கம் ஏதேனும் சிறப்பு சலுகைகள் வழங்கினால் நன்றாக இருக்கும்.

- கொரோனா நோய் பற்றிய விழுப்புணர்வு, அதே சமயம் ஊரடங்கால் ஏற்படும் மன உளைச்சல்களை குறைக்கும் நேர்மறை செய்திகளையும் வாட்ஸ் அப்பில் பகிர்ந்து கொண்டும், மேலும் அவர்களுக்கு ஆரோக்கியம் சார்ந்த விசயங்களை பகிர்ந்தும் வருகிறேன். இதன் மூலம் வாடிக்கையாளர்களை தக்க வைக்க முடியும்.

- எனது வியாபாரத்தை விரிவுபடுத்த பொது மக்கள் கூடும் இடங்களில் பொருட்களை காட்சிபடுத்தி விற்பனை செய்ய உதவி தேவைப்படுகிறது.

**2**



**நிறுவனம்: Oferr Nallyan Research Centre**

**உரிமையாளர்: சு. இரத்னராஜசிங்கம்**

**தொழில்: சுருள்பாசி வளர்ப்பு, ஒருங்கிணைந்த பண்ணையம்**

**இடம்: நாவலூர், காஞ்சிபுரம் மாவட்டம்**

- பணிக்கு தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதில் சிரமம் உள்ளது. உற்பத்தி பொருட்களை தொலை தூரம் எடுத்து சென்று சந்தைப்படுத்துவதில் சிரமம் உள்ளது.

- அரசு வேளாண் அலுவலர்கள் ஆலோசனைகளும் மானிய அடிப்படையில் அல்லது இலவச அடிப்படையில் கோழிக்குஞ்சுகள் கொள்முதல், விதைகள் கொள்முதல், மீன்குஞ்சுகள் கொள்முதல் தேவைப்படுகிறது.

- இனிவரும் காலங்களில் வேளாண் துறைக்கு ஏற்ப காய், பழங்களை பதப்படுத்துதல் துறைகள், பாதுகாத்தல் துறைகள், குளிரூட்டி போன்றவற்றை அரசாங்கம் அமைக்கும் பட்சத்தில் நன்றாக இருக்கும்.

- இலங்கை அகதி முகாம்களில் வாழ்வாதாரம் இன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுமார் 15 ஆயிரம் நபர்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுமார் 500 ரூபாய் பெறுமான உள்ள பொருட்கள் வழங்கி எங்களால் முடிந்த உதவிகளை செய்தோம்.



3

Name: Dr. T.M. Thiyagarajan, M.Sc.(Ag.), Dip.API., Ph.D
Dean, Faculty of Agricultural Sciences
Institute: SRM Institute of Science and Technology (SRMIST)
Kattankulathur - 603 203, Chengalpattu District

- கல்லூரி மாணவர்களுக்கு இந்த கொரோனா நோய் தொடர்பான ஊரடங்கு கட்டுப்பாடு காரணமாக மார்ச் 20 முதல் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவர்களுக்கு குறிப்பிட்ட காலகட்டத்தில் செமஸ்டர் தேர்வுகளை நடத்த முடியாமல் போய் விட்டது. இந்த காலகட்டத்தில் ஆன்லைன் வகுப்புகளை மாணவர்களுக்கு துறை சார்ந்த பேராசிரியர்கள் எடுத்து வருகிறார்கள். ஆனாலும் நிறைய மாணவர்களிடம் கம்புயூட்டர் மற்றும் இணையதள வசதி சரிவர கிடைக்காத காரணத்தால் அவர்களால் ஆன்லைன் வகுப்புகளில் கலந்து கொள்ள முடியவில்லை. ஆகையால் கல்லூரி திறந்தவுடன் மீண்டும் இந்த வகுப்புகளை அவர்களுக்கு நடத்த திட்டமிட்டுள்ளோம்.

- இந்த ஊரடங்கினால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களால் பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்ல முடியவில்லை. லாபமும் இல்லை. ஆகையால் ஆன்லைனில் பொருட்களை நேரடியாக விற்பனை செய்யும் முறைகளுக்கு விவசாயிகள் மாற வேண்டும். அனைத்தையும் ஆன்லைனில் கொண்டு செல்ல வேண்டும்.

- அதற்கு Application தயார் செய்து E-Marketing முறையில் விற்பனை செய்ய வேண்டும். அப்படி தயார் செய்யும் பட்சத்தில் பொருட்களை மக்கள் வீட்டிலிருந்தே பெற முடியும். இந்த முறையில் இடைத்தரகர்கள் இல்லாமல் லாபம் நேரடியாக விவசாயிகளுக்கு சென்று சேரும்.

- அரசு சார்பில் விவசாயிகளுக்கு குறைந்த தண்ணீரில் விவசாயம் செய்யும் முறைகளுக்கு உதவி செய்ய வேண்டும். அரசு விவசாயிகளை ஊக்குவிக்க முன் வர வேண்டும். அரசு எந்த ஒரு திட்டத்தை செயல்படுத்தினாலும் விவசாயிகள் நலத்தை முன்னிட்டு செயல்படுத்த வேண்டும்.

- மேலும் கொரோனா நோய் தாக்கத்திலிருந்து விடுபட நல்ல ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ள வேண்டும். வசிக்கும் இடத்தினை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.



4

நிறுவனம்: Madurai Pandian Appalam
உரிமையாளர்: ஜி. திருமுருகன், சேர்மன், மாநிலத் தலைவர்,
அப்பளம், வடகம், மோர் வத்தல் தயாரிப்பாளர்கள்
மற்றும் விற்பனையாளர்கள் நலச்சங்கம்
தொழில்: அப்பளம், வத்தல், வடாகம் தயாரித்தல், மதுரை மாவட்டம்

- ஊரடங்கு காலகட்டத்தில் ஏற்கனவே தயார் செய்து வைக்கப்பட்டுள்ள அப்பளத்தை விற்பனை செய்ய முடியாத காரணத்தினால் பொருள் கெட்டுப் போகும் தன்மை அடைந்துள்ளது போட்ட முதலீடுகள் அனைத்தும் வீணாகப் போய்விட்டது.

- ஏற்கனவே தொழில்துறையினர் வங்கிக்கடன் பெற்று உள்ளவர்களுக்கு குறைந்தபட்சம் ஆறு மாதக் தவணைத் தொகையை ரத்து செய்ய வேண்டும் அதேபோல் கரண்ட் பில்லு ரத்து செய்ய வேண்டும் குறைந்த வட்டி விகிதத்தில் மீண்டும் கடன் உதவி வழங்க வேண்டும்.

- அப்பளத் தொழிலாளர்களுக்கு அரசாங்க செலவில் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க வேண்டும்.

# தொழில் முனைவோர்களிடம் இருந்து இது வரை பெறப்பட்ட கருத்துகளில் சில உங்கள் பார்வைக்கு....

## 5



**நிறுவனம்: அன்னை கன்ஸ்ட்ரக்சன்ஸ்**

**உரிமையாளர்: திரு.பா.காளியானந்த குமார்**

**தொழில்: கட்டுமானத் தொழில், இடம்: தூத்துக்குடி**

- வேலையாட்கள்,கட்டிட கட்டுமானப் பொருட்கள் பற்றாக்குறை,பணியிடத்தில் தங்கி பணிபுரியும் நிர்பந்தம்.
- வீட்டுக்கடன்களை குறைந்த வட்டி விகிதத்தில் மக்களுக்கு வழங்கிட அரசு முன்வரவேண்டும். வாடிக்கையாளர்களுக்கு நிதி உதவி மற்றும் எளிய முறையில் கடன் பெறுவதற்கு உதவி ஆகியவற்றில் பங்கெடுப்பதற்கு திட்டம் உள்ளது.
- வாடிக்கையாளர்களுக்கு பணப்புழக்கம் மற்றும் அவர்களிடமிருந்து வேலைக்கான பணம் பெறுதல் குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டிருக்கிறோம்

## 6


**நிறுவனம்: Algae Producers Association | தலைவர்: திரு. பி.சவுந்தராஜன்**

**தொழில்: சுருள்பாசி வளர்ப்பு மற்றும் மதிப்புக்கூட்டுதல், இடம்: கோயம்புத்தூர்**



- ஊரடங்கு அமலில் உள்ள காலத்தில் இடு பொருட்கள், தொழிலாளர்கள் போன்றோர்களின் பாதுகாப்பும், விற்பனை வாய்ப்பும் இடர்பாடுகளாக அமைந்துள்ளது.
- தொழில்தடை மூலம் ஏற்படும் வருமான இழப்புகளில் இருந்து மீண்டும் பழைய நிலைக்கு வர நிதி மேலாண்மை உத்திகளை தொழில் வல்லுநர்கள் மற்ற தொழி முனைவோர்க்கு வழங்கினால் பயனுள்ளதாக இருக்கும்.
- அரசாங்கம் வங்கித் கடன் தவணைகளை செலுத்த கால அவகாசம் தருதல், உள்நாட்டு விற்பனை வாய்ப்பில் இருக்கும் வரிவிகதங்களைக் குறைத்தல், ஏற்றுமதி மேம்பட விதிமுறைகளைத் தளர்த்தல் போன்ற உதவிகளைச் செய்தால் தொழில் முனைவோர் நல்ல வளர்ச்சி பெறமுடியும்.

## 7



**திரு. பாஸ்கரன் கிருஷ்ணமூர்த்தி,**

**சமூக ஆர்வலர், Income Tax Officer (Retd),**

- முதலீட்டுக்கு நிதி உதவி - அரசுத் திட்டங்கள் மூலம் நிதி உதவி, கடன், மானியம் கிடைப்பதில் சிக்கல்கள் அதிகம் இல்லை.
- ஆனால் அரசு தரும் உதவித்தொகை போதுமானதாக இல்லை. குறைந்தபட்ச நிதியுதவி 10 லட்சம் ரூபாயாக இருந்தால் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும்.
- சந்தைப் படுத்துதல் மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. தயாரிக்கப்பட்ட பொருளை சந்தைப் படுத்துதல் / விற்பனை செய்தல் சவாலாகத் திகழ்கிறது. சந்தையில் உதவுகிறாற் போல, ஒரு நம்பத் தகுந்த' மெக்கானிசம்' இதுவரை இல்லை.
- கொள்முதல் / விற்பனை தொடர்பான சிறப்பு ஆலோசனை, வழிகாட்டிக் குறிப்புகள் வழங்குவதற்கு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படலாம்.
- ஜி.எஸ்.டி., வருமான வரிப் படிவங்கள் / நடைமுறைகள் இன்னும் எளிமைப் படுத்தப் படலாம்.

# தொழில் முனைவோர்களிடம் இருந்து இது வரை பெறப்பட்ட கருத்துகளில் சில உங்கள் பார்வைக்கு....

## 8



**நிறுவனம்:** Arris Engineering Services Pvt. Ltd

**திரு.** A.R. **இராஜகோபாலன்,** Head - HR & Admin

**தொழில்: பொறியியல் உபகரணங்கள் தயாரிப்பு நிறுவனம்**

**இடம்: சென்னை**

- பணியாளர்களுக்கான ஊதியம், நிறுவனம் நடத்த தேவையான அடிப்படை செலவுகளை கையாளுதல், அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள் போன்றவற்றை சமாளிப்பது மிகுந்த சிரமமாக உள்ளது.
- கொரோனா பேரிடர் உலகம் முழுவதுமான ஒரு பிரச்சனையாக உள்ளது. மேலும் எங்கள் நிறுவனத்தின் பணியாளர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய பணி எங்கள் நிறுவனத்திற்கு பக்கபலமாக உள்ளது.
- வருங்காலத்தில் பணியாளர்களின் நலனை மனதில் கொண்டே எங்கள் திட்டமிடல் இருக்கும். 100% பணியாளர்களை கொண்டு நிறுவனத்தை இயக்குவது அதீத சாதனையாக இருக்கும்.

## 9

**நிறுவனம்:** Evern Green Agencies, **திரு. ந. பாவேந்தன், நிர்வாக இயக்குனர்**

**தொழில்: பாக்கு மட்டை தட்டு உற்பத்தி, இடம்: சென்னை**



- இந்த ஊரடங்கினால் எங்களுக்கு இழப்பு அதிகம். கிட்டத்தட்ட 50 லட்சம் மதிப்புள்ள (பொருட்கள்) ஏற்றுமதி ஆர்டர்கள் தேக்கம் அடைந்துவிட்டன. அதுமட்டும் இல்லாமல் ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எங்களுக்கு ஏதேனும் தேசிய வங்கியிடம் இருந்து வட்டியில்லா கடன் தேவைப்படுகிறது.
- மூலப்பொருட்கள் கிடைப்பதிலும் சிரமத்தைச் சந்தித்து வருகிறோம். வரும்காலத்தில் மூலப்பொருட்களை போதுமான அளவு கையிருப்பு இருப்பு வைத்திருக்க வேண்டும் என்பதை இந்த ஊரடங்கு எங்களுக்கு உணர்த்தியுள்ளது. இந்த கொரோனா நோய் தொற்று காலத்தில் பாக்கு மட்டை தட்டு உபயோகம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த எங்களுக்கு ஏதேனும் ஊடகத்தின் உதவி தேவைப்படுகிறது.
- வெளிமாநிலங்களில் இருந்து புலம் பெயர் தொழிலாளர்ககளைப் பற்றிய முழுமையான தகவல்களும் ஒவ்வொரு மாவட்ட / தாலுகா அலுவலங்களிலும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் இது போன்ற நெருக்கடியான காலகட்டத்தில் அவர்களுக்கு சரியான முறையில் உதவ முடியும்.

## 10

**நிறுவனம்:** Asian's Life Care, | **திரு. எஸ்.பி. விஜய பிரபாகர், உரிமையாளர்**

**தொழில்: வலி நிவாரணத் தைலம் தயாரித்தல் | இடம்: சென்னை**



- இந்த ஊரடங்கு காலத்தில் மூலப்பொருட்கள் கிடைப்பதில் சிரமம் இருப்பதால் Winner Pain Relief-Thailam தயாரிக்க மற்றும் விற்க முடியவில்லை.
- பேங்க் ஓடி எனக்கும், UYEGP லோன் டிஸ்ட்ரிபூட்டோருக்கு, கிடைத்தால் நன்றாக இருக்கும்.
- வரும்காலத்தில் ஊரடங்கு ஏற்பட்டால் தொழிலில் தடங்கல் ஏற்படாமல் இருக்க அடுத்த மாதத்திற்கு தேவையான மூலப்பொருட்களை சேகரித்து வைத்துக் கொள்வேன்.
- தமிழ்நாடு முழுவதும் குறு, சிறு தொழில் முனைவோர் மற்றும் காதி சப்ளை செய்வேன். இதன் மூலம் எனது தயாரிப்பு குறித்து அனைவரும் அறியும்படி செய்ய முடியும்.

# தொழில் முனைவோர்களிடம் இருந்து இது வரை பெறப்பட்ட கருத்துகளில் சில உங்கள் பார்வைக்கு....

## 11



**நிறுவனம்: Pearlcity Academy for Leadership and Management Skills (PALMS)**

**நிர்வாக இயக்குநர் : திரு.த.செந்தில் கண்ணன்,**

**தொழில்: மாணவர்கள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கான திறன்வளர்ப்பு பயிற்சி மையம், இடம்: தூத்துக்குடி**

- வேலையாட்கள் வரத்து குறைந்து விட்டது.போக்குவரத்து நிலைமையும் சீராக இல்லை ஆகவே தொழில் நடத்துவதில் சிரமமாக உள்ளது.
- ஆன்லைன் பணிகளை மாற்றாக தொடங்கியிருக்கிறோம். அரசாங்கமும் உதவிகள் செய்ய முன்வர வேண்டும். ஆன்லைன் பாடத்திட்டம் மற்றும் மனதை ஒருமுகப்படுத்துதல் போன்றவற்றை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளோம்.
- வங்கிகள் வட்டி தள்ளுபடி செய்ய வேண்டும்.எளிய முறையில் கடன் வழங்க முன்வரவேண்டும்.
- ஸ்பார்க் என்ற எங்களது அமைப்பின் மூலம் ஆலோசனைகள், பாதுகாப்பு கவசம், கையுறைகள் ஆகியவற்றை வழங்கியுள்ளோம்

## 12

**நிறுவனம்: Excel Nutri Foods (Sprouted Health Mix)**

**உரிமையாளர்: திரு.எம். சக்திவேல், தொழில்: முளைகட்டிய தானியங்கள் அடங்கிய சத்துமாவு தயாரிப்பு, இடம்: விருதுநகர்**



- விருதுநகரை மையமாக கொண்டு செயல்பட்டு வருகிறோம். விருதுநகரில் சத்து மாவு தயாரிப்பு பணியில் பாதிப்பு ஏற்படாம குறைந்த அளவில் அருகில் உள்ள தொழிலாளர்களை கொண்டு சமூக இடைவேளி விட்டு இயங்கிக் கொண்டு உள்ளது, ஆனால் விற்பனை இல்லை.
- சென்னையிலும் எங்களுக்கு கிளை உண்டு ஆனால் சென்னையில் முளைக்கட்டிய தானியங்கள் தயாரிப்பு மற்றும் விற்பனை முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது.
- நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க ஊட்டச்சத்தின் அவசியத்தைப் பற்றி விழிப்புணர்வை அதிககரிக்கச் செய்ய வேண்டும். விற்பனை இல்லாததால் தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்க முடியாத நிலையில் உள்ளோம். அவசியமான தேவையான வாடகை, வட்டி கூட கட்டி முடியாத நிலையில் உள்ளோம்.
- சிறுதொழில் என்பதால் அவசரமான, அவசியமான காலகட்டத்திற்கு தனியாக (Reserve Fund & Insurance) போன்ற திட்டத்தில் சேரும் எண்ணத்தை உதிக்கச் செய்துள்ளது.

## 13

**நிறுவனம்: சத்யா கம்யுனிகேசன்ஸ் , உரிமையாளர்: திரு.ச.சத்தியபாலன்**

**தொழில்: தொழில் முனைவோர்களுக்கான நிதி ஆதாரம் ஏற்படுத்திதரும் நிறுவனம், தூத்துக்குடி**



- தொழிலே செய்ய இயலவில்லை. இதுதான் மிகப்பெரிய இடர்பாடு. எளிய முறையில் வட்டி குறைவான கடன் வசதிகளை அரசு ஏற்படுத்தி தரவேண்டும். முதலிலிருந்துதான் வணிகத்தை தொடரவேண்டும்.
- கொரானா நிவாராண பணி: உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் சுமார் 150 நபர்களுக்கு வழங்கியுள்ளோம்
- தொழில் முனைவோர்களுக்கு நிதி அதிக அளவில் தேவைப்படுகிறது. அரசு தொழில் முனைவோர்களுக்கு ஏதேனும் சிறப்பு சலுகைகள் அறிவித்தால் நன்றாக இருக்கும்.




PUTHIYA THALAIMURAI FOUNDATION

A People-based NGO Working for Youth Development and Rural Education

ISRB EXPO™

Indian Small & Rural Business Exposition

(A Unit of Puthiya Thalaimurai Foundation)

(A National Initiative to Promote Small & Rural Businesses)

PUTHIYA THALAIMURAI FOUNDATION

No.24, G.N. Chetty Road, T.Nagar, Chennai – 600 017 | Telephone: 044 – 28341219

Mobile: 8754417338 / 8754417308 / 8754417500 / 8754417322

Email: isrbexpo@ptfindia.org | Web: www.isrbexpo.org